ம.சா.1.சக்திவேல், த/பெ.ராமசாமி

எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு அனுமதிக்கப்பட்டது.

எம்.பி.எண்.3/2024, கடந்த 18.01.2024 மனு அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். காசோலை மற்றும் புரோநோட்டில் உள்ள விவரம் எனக்கு தெரியும். எதிரி வள்ளலார் கோவிலுக்கு வரும்போது எதிரி எனக்கு பழக்கமானார். எதிரியை எனக்கு நேரடியாக தெரியும். எதிரி தாந்தோணிமலை ஓம்சக்தி நகரில் வசித்து வருகிறார். எதிரி ஆசிரியராக வேலை பார்க்கிறார். நான் கடன் கொடுக்கும்போது கூடலூர் அருகே உள்ள கிராமத்தில் ஆசிரியராக வேலை செய்து வந்தார். எதிரிக்கு 23.06.2019 அன்று நான் ரூ.5,00,000/- கடன் கொடுத்தேன். கடன் கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் சரவணன் மற்றும் கோபாலகிருஷ்ணன் உடன் இருந்தார்கள். அவர்கள் எனக்கு நண்பர்களா என்றால் கோபாலகிருஷ்ணன் எனக்கு தெரிந்த நபர். புரோநோட்டை சரவணன் என்பவர் எழுதினார். புரோநோட்டில் எதிரி எத்தனை கையெழுத்து செய்தார் என்றால் ஸ்டாம்பின் மீது ஒரு கையெழுத்தும், ஸ்டாம்பிற்கு கீழ் பகுதியில் ஒரு கையெழுத்தும் செய்தார்.

2. கடந்த 20.07.2020 அன்று காசோலையை கொடுத்தார். எதிரிக்கு கடன் கொடுக்கும்போது என் வீட்டில் வைத்து எதிரிக்கு கடன் கொடுத்தேன். என் வீடு எங்குள்ளது என்றால் காந்திகிராமம் முத்து நகரில் உள்ளது. குறிப்பாக என் வீட்டில் எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்றால் என் வீட்டில் ஹாலில் வைத்து பணம் கொடுத்தேன். காசோலை கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் எதிரியும் இருந்தோம். என்னுடைய புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் காசோலை மற்றும் புரோநோட் எங்கு வைத்து கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 2020ம் ஆண்டிலிருந்து வங்கி கணக்கு வைத்துள்ள நபர்களுக்கு காசோலை வழங்கும்போது காசோலை புத்தகத்தில் ஒவ்வொரு

காசோலையிலும் வங்கி கணக்கு வைத்திருக்கும் நபரின் பெயர் அச்சிடப்பட்டிருக்கும் என்றால் எனக்கு தெரியாது. அதிகமாக பணம் கொடுக்கும்போது வங்கி மூலமாகத்தான் கொடுக்கவேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் எதிரி ரொக்கமாக கேட்டால் ரொக்கமாக கொடுத்தேன். நான் விவசாயம் மற்றும் இரண்டாம்தர கனரக வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். எதிரியை தவிர வேறு யாருக்காவது கடன் கொடுத்திருக்கிறேனா என்றால் அவ்வாறு எனக்கு பழக்கம் இல்லை.

3. எதிரிக்கு கடன் கொடுத்த ரூ.5,00,000/- த்தை வங்கியிலிருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் இல்லை கையிருப்பு பணத்தை எதிரிக்கு கடனாக கொடுத்தேன். மேற்படி வாகனங்களை விற்று வந்த பணம் கையிலிருந்தது அதை வைத்து எதிரிக்கு கடன் கொடுத்தேன். எதிரிக்கு கடன் கொடுக்கும்போது 500 ரூபாய் தாள்களாக நான் கொடுத்தேன். எதிரிக்கு கடன் கொடுக்கும் சரவணன், கோபாலகிருஷ்ணன், நான், எதிரி வள்ளியம்மாள் ஆகியோர்கள் இருந்தோம். பணத்தை யார் எண்ணி கொடுத்தார்கள் என்றால் நான் எண்ணி வைத்திருந்தேன். பின்னிட்டு எதிரி வள்ளியம்மாள் பணத்தை எண்ணி பெற்றுக்கொண்டார். புரோநோட்டில் ரேகை வைப்பது போன்று அச்சிடப்பட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் புரோநோட்டை கொடுக்கும் போது எதிரி வள்ளியம்மாள் கைரேகை வைக்கவில்லை. காந்திகிராமத்தில் உள்ள சுப்பையா, சிவக்குமார் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன நபர்கள் வீடு கட்டி விற்கும் தொழில் செய்து வருகிறார்கள் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

4. எதிரி வள்ளியம்மாள் மேற்சொன்ன நபர்களிடம் 14 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கினார் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு வீடு வாங்கும்போது புரோநோட் மற்றும் காசோலை கொடுத்தார் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நானும், சுப்பையா மற்றும் சிவக்குமார் ஆகியோர் நண்பர்கள் என்றும், அவர்களிடம் எதிரி கொடுத்த காசோலையை பெற்றுக்கொண்டு இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் வருமானவரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. எதிரி வள்ளியம்மாள் அரசு ஊழியர் என்பதால் அவரிடம்

பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு **SVS** பைனான்ஸ் தெரியுமா என்றால் தெரியாது.

மறுவிசாரணை. இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்,
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

ம.சா.2. சரவணன், த/பெ.சந்திரன்
எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசப்படி மனு தாக்கல் செய்யப்பட்டு, அந்த மனு அனுமதிக்கப்பட்டது.
எம்.பி.எண்.3/2024, கடந்த 18.01.2024 மனு அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.</u>

நான் முதலில் பால்வியாபாரம் செய்து வந்தேன். தற்போது நிலபுரோக்கராக வேலை பார்த்து வருகிறேன். சக்திவேல் எனது நண்பரா என்றால் எனக்கு தெரிந்தவர். சக்திவேல் என்ன வேலை பார்க்கிறார் என்றால் என்ன வேலை பார்க்கிறார் என்று தெரியாது. நான் சக்திவேல் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் எனக்கு வரவில்லை. 23.06.2019 அன்று எதிரி சக்திவேலிடம் கடன் வாங்கினார். சக்திவேல் எங்கு வைத்து கடன் கொடுத்தார் என்றால் சக்திவேல் வீட்டின் ஹாலில் வைத்து கடன் கொடுத்தார். சக்திவேல் வீடு எங்குள்ளது என்றால் காந்திகிராமம் முத்து நகரில் உள்ளது. புரோநோட்டை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் புரோநோட்டை எழுதினேன்.

2. புரோநோட்டை எழுதும்போது நான், வள்ளியம்மாள், சக்திவேல் மற்றும் சக்திவேலுக்கு தெரிந்த மற்றொரு நபர் ஆகியோர் இருந்தோம். வள்ளியம்மாள் புரோநோட்டில் எத்தனை கையெழுத்து செய்தார் என்றால் வள்ளியம்மாள் இரண்டு கையெழுத்து செய்தார். நான் எழுதியதும், சாட்சியமும் என்ற இடத்தில் ஒரு கையெழுத்து செய்தேன். வள்ளியம்மாள் புரோநோட்டில் எந்த இடத்தில் கையெழுத்து செய்தார் என்றால் ஸ்டாம்பின் மேல் ஒரு கையெழுத்தும், ஸ்டாம்பின் கீழ் ஒரு கையெழுத்தும் செய்தார். பணத்தை யார் எண்ணி பார்த்தார்கள் என்றால் எதிரி வள்ளியம்மாள் பணத்தை எண்ணி பார்த்து பெற்றுக்கொண்டார். சக்திவேல் பணத்தை எண்ணி பார்த்தாரா என்றால் சக்திவேல் கொண்டு வந்து கொடுத்தார் எதிரி எண்ணி பார்த்து பெற்றுக்கொண்டார். பணம் கொடுக்கும்போது உடன் இருந்த மற்றொரு நபரை தெரியுமா என்றால் தெரியாது.

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

3. நான் யாருக்காக சக்திவேல் வீட்டிற்கு சென்றேன் என்றால் எதிரி வள்ளியம்மாளுக்காக சக்திவேல் வீட்டிற்கு சென்றேன். எதிரி வள்ளியம்மாளை எப்படி எனக்கு தெரியும் என்றால் நான் பசுபாளையத்ததில் வசிக்கும்போது எதிரி அருகில் வசித்து வந்தார் அதனடிப்படையில் எனக்கு எதிரி வள்ளியம்மாளை தெரியும். எதிரி என்ன வேலை பார்த்தார் என்றால் எதிரி டீச்சராக வேலை பார்த்து வந்தார். எதிரி எந்த ஊரில் டீச்சராக வேலை பார்த்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. எதிரி எந்த காலத்திலும் பசுபதிபாளையத்தில் வசிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சக்திவேல் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை. இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்,
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.